## *சுவிசேஷத்துவம்*

விற்பன்னரான ஒரு விற்பனையாளர் ஒருமுறை, “நாம் எதையும் நடைபெறச் செய்யாத வரையிலும் எதுவும் நடைபெறுவதில்லை” என்று எழுதினார். நமது சுவிசேஷ ஊழியத்தில் நாம் விருப்பார்ந்த நோக்கங் கொள்ளாத வரையிலும் மிக நல்லது எதுவும் நிச்சயமாக நடைபெறுவதில்லை.

“சுவிசேஷ ஊழியம் என்பது ஏதோ ஒன்றினால் செய்யப்படுவது அல்ல, ஆனால் *யாரேனும் ஒருவரால்* செய்யப்படுகின்றது. சுவிசேஷம் என்பது சிலவற்றைப் பற்றியல்ல ஆனால் சிலரைப் பற்றி கவலைப்படுகின்றது. அது தேவனுடைய அன்பின் வெளிப்பாடாக வும், தேவன் ஒரு நபர் என்பதன் வெளிப்பாடாகவும் இருப்பதால் உணர முடியாத பாடமாகவோ அல்லது இயந்திரத்தனமான திட்டமாகவோ ஒருக்காலும் ஆவதில்லை. செய்தியைப் பரப்புவதற்கு ஏதேனும் செயல்முறை பயன்படுத்தப்பட வேண்டும், ஆனால் அழைப்பை விடுக்கும் கரங்கள் சதையும் இரத்தமும் உடையவை களாய் இருக்கிறது.

இராபர்ட் கோல்மன்
*அவர்கள் எஜமானை சந்தித்தார்கள்*

‘‘நமது அயலகத்தார் நாம் அவரது ஆத்துமாவை மட்டும் நேசிப்பதற்கு ஒரு உடலற்ற ஆத்துமாவாக இருப்பதில்லை அல்லது நாம் அவரது உடல் சார்ந்த நலனையே கவனிக்க வேண்டியிருப் பதற்கு அவர் ஒரு ஆத்துமாவற்ற உடலாக இருப்பதும் இல்லை. தேவன் என் அயலகத்தாராக உள்ள மனிதரை சமுதாயத்தில் ஒரு ஆத்துமா - உடல் என்ற வகையில் படைத்தார். ஆகையால், நமது அயலகத்தாரை தேவன் உண்டாக்கிய வகையிலேயே நாம் அன்புகூர்ந்தோமென்றால், நாம் அவரது முழுமையான நலனை - அவரது ஆத்துமா, அவரது உடல், மற்றும் அவரது சமூகம் ஆகியவற்றின் நலனை - பற்றி தவிர்க்க முடியாத வகையில் அக்கறையாய் இருக்க வேண்டும்.”

ஜான் R.W. ஸ்டாட்
“மாபெரும் கட்டளை ..... மாபெரும் ஆணை”
*உலக சுவிசேஷ ஊழியம் என்ற பத்திரிகையில்*

# கிறிஸ்துவின் சபையைப் பற்றி வேதாகமம் கூறுவது என்ன?

I. *கிறிஸ்துவின் சபையில் இருப்பவர்கள் யார்?*

1. *சவுல் ________________ துன்புறுத்தினார். அப். 8:3*
2. *இது ________________ துன்புறுத்துதலாயிருந்தது. அப். 9:1*
3. *இவர்கள் ________________ என்றும் அழைக்கப்பட்டார்கள். அப். 11:26*
4. *சபை ________________ என்றும் அறியப்படுகின்றது. எபே. 1:22, 23*

II. *எத்தனை சரீரங்கள்?*

*__________ ரோமர் 12:4, 5*
*__________ 1 கொரி. 12:12*
*__________ 1 கொரி. 12:20*
*__________ எபே. 4:4*
*__________ கொலோ. 3:15*

III. *இது யாருடைய சபை (சரீரம்)?*

*__________ மத். 16:18*
*__________ 1 கொரி. 12:27*
*__________ எபே. 1:22, 23*
*__________ எபே. 5:30*
*__________ கொலோ. 1:24*

IV. *சபைக்குக் கிறிஸ்து என்னவாக உள்ளார்?*

*____________________________________ மத். 16:18*
*____________________________________ 1 கொரி. 3:11*
*____________________________________ எபே. 1:22*
*____________________________________ எபே. 5:23*

V. *கிறிஸ்து சபைக்கு என்ன செய்திருக்கின்றார்?*

*________________ ஏன்? ________________ எபே. 5:25*
*____________________________________ அப். 20:28*


VI. *சபை ________________ க் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். எபே. 5:24*

VII. *உறுப்பினர்களுக்கிடையில் எவ்வகையான இசைவைக் கிறிஸ்து விரும்புகின்றார்?*

1. *நாம் ________________ அவர்களும் ________________ யோவான் 17:22*
2. *நீங்களெல்லாரும் ________________ காரியத்தைப் பேசவும், ________________இல்லாமல்... 1 கொரி. 1:10*
3. *நீங்கள் ________________ ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் ________________ போராடி... பிலி. 1:27*

VIII. *இயேசு சபையைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் ________________, ________________ கும் மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். எபே. 5:26, 27*

Copyright, Gospel Light Pub. Co., 1965.


பரலோகம்
தலை
இயேசு
கட்டுபவர்
இயேசு
கிறிஸ்துவின்
சபை
சரீரம்
ஒன்று
கிறிஸ்தவர்கள்
சீஷர்கள்
ஆண்கள் மற்றும் பெண்கள்
உறுப்பினர்கள்
இரட்சகர்
இயேசு
அஸ்திபாரம்
இயேசு
அப். 20:29, 30
சீஷர்கள்
5. சபைக்குள்
ஞானஸ்நானம்
1 கொரி. 12:13
4. அறிக்கையிடுதல்
3. மனந்திரும்புதல்
2. விசுவாசித்தல்
1. கேள்விப்படுதல்
உலகம்
மனிதர்கள்
மனிதர்கள்
மனிதர்கள்
மனிதர்கள்

*பாடத் தாளை எடுத்துரைத்தல்:*

# "கிறிஸ்துவின் சபையைப் பற்றி வேதாகமம் கூறுவது என்ன?"

*"கிறிஸ்துவின் சபையைப் பற்றி வேதாகமம் கூறுவது என்ன?" என்ற பாடத் தாளானது "இயேசுவே வழி" அல்லது "இரட்சிப்பு" என்ற பாடத் தாளுக்குப் பிறகு எடுத்துரைக்கப்படுதல் ஏற்புடையதாக இருக்க முடியும். ஒருவேளை, ''இரட்சிப்பு'' என்ற பாடத் தாளுக்குப் பிறகு இதை எடுத்துரைப்பதென்பது மிகச் சிறந்த வேளையாக இருக்க முடியும். "இரட்சிப்பு" என்ற பாடத் தாள் முடிவடையும் இடத்தை இது தொடக்க இடமாக எடுத்துக் கொள்வதால் இது உண்மையாக உள்ளது.*

### நோக்கம்

*மீட்கப்பட்டவர்கள் மனித நிறுவனமாகவோ, அமைப்பாகவோ அல்லது பெயர்க்குழுவாகவோ இல்லாத கிறிஸ்துவின் சபை என்ற ஒரே சரீரத்தில் உள்ளனர் என்பதை விளக்கப்படுத்துவதே "சபை" என்ற பாடத் தாளின் நோக்கமாக உள்ளது. கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள யாவரும் அந்த ஒரே சரீரத்தின் ஒருமைப்பாட்டிற்கு ஊழியம் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்.*

### பாடச் சுருக்கம்

*கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களான கிறிஸ்தவர்கள், சபை என்ற கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கின்றனர் என்று இந்தப் பாடத் தாள் போதிக்கின்றது. இயேசு சபை என்ற ஒரே சரீரத்தைக் கட்டி எழுப்பினார், அதற்கு அவரே தலையாக, அஸ்திபாரமாக மற்றும் இரட்சகராக இருக்கின்றார். அவருடைய அன்பானது அவரைத் தம்முடைய இரத்தத்தினால் அதைக் கிரயம் கொள்ளவும் அதைத் தமக்கு முன்பாக நிலைநிறுத்திக் கொள்ளவும் முடியும்படி அதற்காகத் தம்மையே மரணத்திற்கு உட்படுத்தும்படி அவரை வழி நடத்திற்று. அவர் தமது சபையில் உள்ள யாவரும் ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்.*

### அறிமுகம்

*''இரட்சிப்பு'' என்ற பாடத் தாளைச் சுருக்கமாக மீள்பார்வை*

யிடுவதாலும், இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் உள்ளனர் என்று குறிப்பிடுவதாலும் இந்தப் பாடம் அறிமுகப்படுத்தப்பட முடியும். இரட்சிக்கப்படுவதற்கு ஒருவர் என்ன செய்கின்றார் என்பதையும் இயேசுவின் மக்கள் கூட்டத்தில் ஒருவர் எவ்விதம் உறுப்பினர் ஆகிறார் என்பதையும் "இரட்சிப்பு" என்ற பாடத் தாள் எடுத்துரைக்கின்றது. கிறிஸ்துவின் சபையைப் பற்றி வேதாகமம் என்ன கூறுகின்றது என்பதை ஒருவர் அறிய இந்தப் பாடம் உதவக் கூடும்.

## I. ***சபையின் உறுப்பினர்கள்***

*கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராயுள்ளவர்கள் யார் மற்றும் அவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர் என்பவை பற்றி நாம் இந்தப் பகுதியில் படிப்போம்.*

1. கிறிஸ்துவின் சபையில் இருப்பவர்கள் யார்? [அப். 8:3ஐ வாசிக்கவும்.] சவுல் *யாரைத் துன்புறுத்தினார்?* [கோடிட்ட இடத்தில் "சபையை" என்று எழுதி நிரப்பவும்.] சபையைத் துன்புறுத்த நாடிய பொழுது சவுல் கட்டிடங்களை இடித்துத் தள்ளவில்லை என்பதைக் கவனியுங்கள். கிறிஸ்துவின் சபை என்பது ஒரு கட்டிடமோ, கட்டிடங்களோ அல்லது பல தரப்பட்ட படிகள் உள்ள நிறுவனமோ *அல்ல,* ஆனால் அதற்கு மாறாக இது, இயேசுவுக்குரிய ஆண்கள் மற்றும் பெண்களைக் கொண்ட ஒரு அமைப்பு ஆகும். [*பாடத் தாளின் பின்புறத்தில்* ஒரு சதுரக் கட்டத்தைப் பெரிதாக வரைந்து அதன் மேல்புறத்தில் "சபை" என்று எழுதவும். அதன் கீழ் "உறுப்பினர்கள்" என்று எழுதவும். இதற்கு மேல் "ஆண்கள் மற்றும் பெண்கள்" என்றெழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

2. சவுல் சபையை அழிக்க நாடிய பொழுது, அவர் யாரை அழிப்பதற்கு நாடினார்? அப். 8:3 வரையிலும் பவுலின் செயல்களை லூக்கா எவ்விதம் விவரித்தார் என்பதையும் பிறகு அவர் பிலிப்புவின் செயல்களை எவ்விதம் விவரித்தார் (அப். 8:5) என்றும் கவனியுங்கள். அப். 9:1ல் அவர் சவுலைப் பற்றிய தமது விவரிப்பை விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கினார். அப். 8:3ல் அவர் சவுலைப் பற்றி எழுதுவதை விட்ட பொழுது, சவுல் சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தார். சவுலைப் பற்றிய எடுத்துரைப்பை லூக்கா மீண்டும் தொடர்ந்த பொழுது, சவுல் தாம் செய்து கொண்டிருந்ததை இன்னமும் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். சவுல் இன்னும் யாரை அழிக்க நாடிக் கொண்டிருந்தார்? [அப். 9:1ஐ வாசிக்கவும்.] சபையின் உறுப்பினர்கள் என்னவென்று அழைக்கப்பட்டார்கள்? [கோடிட்ட இடத்தில் "கர்த்தருடைய சீஷர்கள்" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறம், "ஆண்கள் மற்றும் பெண்கள்" என்பதற்கு மேல் "சீஷர்கள்" என்று எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

[இந்த வேளையில் ஆசிரியர், ஒரு *சீஷர்* மற்றும் ஒரு *அப்போஸ்தலர்* என்பவர்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை விளக்குவது அவசியப் படலாம். பல மக்கள் பன்னிருவரை சீஷர்கள் என்று நினைப்பதே இதற்குக் காரணமாக உள்ளது. இயேசுவைப் பின்பற்றியவர்களாயிருந்த சீஷர்கள்

என்ற பெரிய கூட்டத்திலிருந்து பன்னிரு அப்போஸ்தலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதை விளக்கப்படுத்த லூக். 6:12-14 வசனப் பகுதி உதவுகின்றது. அப்போஸ்தலர்கள் என்பவர்கள் பன்னிருவர் கொண்ட ஒரு சிறு குழுவாக, அவருடைய விசேஷித்த பிரதிநிதிகளாக இருந்தனர், சீஷர்கள் என்பவர்கள் அவரைப் பின்பற்றுகின்ற எல்லாருமாக இருந்தனர்.]

3. கர்த்தருடைய சீஷர்களே சபையின் உறுப்பினர்களாயிருந்தனர், ஆனால் சீஷர்கள் என்னவென்று அழைக்கப்பட்டனர்? [அப். 11:26ஐ வாசிக்கவும்.] சபையின் உறுப்பினர்களாயிருந்த சீஷர்கள் என்னவென்றும் அழைக்கப்பட்டார்கள்? [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்தவர்கள்" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் "சீஷர்கள்" என்பதற்கு மேல் புறத்தில் "கிறிஸ்தவர்கள்" என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

4. "சீஷர்கள்" மற்றும் "கிறிஸ்தவர்கள்" என்ற சொற்றொடர்கள் சபையின் தனித்தனி உறுப்பினர்களைக் குறிக்கின்றன. இந்த உறுப்பினர்கள் ஒரு குழு என்ற வகையில் அதாவது முழுமையாக சபை என்று அழைக்கப்பட்டனர். இந்த மக்கள் குழுவை விவரிக்க இன்னொரு சொற்றொடரும் பயன்படுத்தப்பட்டது. [எபே. 1:22, 23ஐ வாசிக்கவும்.] சபை வேறு என்னவென்று அழைக்கப்படுகிறது? [கோடிட்ட இடத்தில் "சரீரம்" என்று எழுதி நிரப்பவும்.] பாடத் தாளின் பின்புறத்தில் சதுரத்தினுள் "சபை" என்ற வார்த்தையின் கீழ் "சரீரம்" என்று எழுதவும் (பக்கம் 198ஐப் பார்க்கவும்). சபை என்பது சரீரமாகவும், சரீரம் என்பது சபையாகவும் இருக்கும் என்றால், சபையைக் குறித்த உண்மையானது சரீரத்தைக் குறித்த உண்மையாக உள்ளது மற்றும் சரீரத்தைக் குறித்துக் கூறப்படுவது சபையைக் குறித்தும் கூறப்பட முடியும்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஒரு குழு என்ற வகையில் குறிப்பதற்கு "சபை" மற்றும் "சரீரம்" என்ற சொற்பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று நாம் கற்றுள்ளோம். "சீஷர்கள்" மற்றும் "கிறிஸ்தவர்கள்" என்பவை தனித்தனி உறுப்பினர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற சொற்பதங்களாக உள்ளன. கிறிஸ்தவர்களே கிறிஸ்துவின் சரீரத்தில் (சபையில்) உள்ளவர்களாய் இருக்கின்றனர்.

## II. எத்தனை?

கிறிஸ்தவர்கள் பல மத நிறுவனங்களாக அமைந்திருந்தனர் என்பதாக வேதாகமம் போதிக்கின்றதா? கிறிஸ்தவர்கள் எத்தனை குழுக்களில் உறுப்பினர்களாய் இருந்தனர்? [ரோமர் 12:4, 5ஐ வாசிக்கவும்.] கிறிஸ்தவர்கள் எத்தனை சரீரங்களின் உறுப்பினர்களாய் இருந்தார்கள்? [கோடிட்ட இடத்தில் "ஒரே சரீரம்" என்று எழுதி நிரப்பவும்.] கிறிஸ்துவுக்குள் "ஒரே" சரீரம்தான் உள்ளது என்று வேதாகமம் கூறுகின்றது என்பதைக் கவனிக்கவும். "இரட்சிப்பு" என்ற பாடத் தாளில் நாம், "ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும்" கிறிஸ்துவுக்குள் இருக்கின்றன என்று கற்றோம். இது உண்மையாய் இருப்பதால், இதைத் தொடர்ந்து,

கிறிஸ்துவுக்குள் உள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அந்த ஒரே சரீரம் தான் பெற்றுள்ளது என்ற கருத்து வருகின்றது. சரீரத்தைக் குறித்த உண்மை எதுவோ அது சபையைக் குறித்த உண்மையாகவும் உள்ளது. ஆகையால், கிறிஸ்துவுக்குள் உள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அந்த ஒரே சபைதான் கொண்டுள்ளது என்ற கருத்து தொடருகின்றது.

சரீரம் என்பது வேதாகமத்தில் பல தடவைகள் குறிப்பிடப்படுகின்றது. சரீரங்களின் எண்ணிக்கையைப் பற்றி வேதாகமம் முரண்படாத நிலையில் சீரானதாக உள்ளதா? [1 கொரி. 12:12, 20; எபே. 4:4; கொலோ. 3:15 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.] எத்தனை சரீரங்கள் உள்ளன? [கோடிட்ட இடங்களில் ''ஒரே சரீரம்'' என்று எழுதி நிரப்பவும்.] இவ்விஷயத்தில் வேதாகமம் சீரானதாக உள்ளதா? இது ஒரே சரீரம் தான் உள்ளது என்ற உண்மையை வலியுறுத்துவதில்லையா? [பாடத் தாளின் பின்புறத்தில் சதுரத்தினுள், சபை மற்றும் சரீரம் என்பதன் கீழ் ஒரே சபை, ஒரே சரீரம் என்று எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? உண்மையான ஒரே ஒரு சரீரம், உண்மையான ஒரே ஒரு சபை என்பதுதான் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நாம் கற்றிருக்கின்றோம்.

### III. ***யாருடைய சபை?***

இந்தப் பகுதியில் நாம் கிறிஸ்தவர்கள் கொண்ட இந்த சரீரமாகிய சபை யாருக்குரியது என்பதைத் தீர்மானம் செய்ய முயற்சிக்கப் போகின்றோம்.

இயேசு, தாம் ஒரு சபையைக் கட்டப் போவதாக வாக்களித்தார். அவர் யாருடைய சபையைக் கட்டி எழுப்பவிருந்தார்? [மத். 16:18ஐ வாசிக்கவும்.] இயேசு, தாம் யாருடைய சபையைக் கட்டி எழுப்பப் போவதாகக் கூறினார்? [கோடிட்ட இடத்தில் "என்" என்றும் அதைத் தொடர்ந்து அடைப்புக் குறிகளுக்குள் "கிறிஸ்துவின்" என்றும் எழுதி நிரப்பவும்.]

இந்த சரீரம், இந்த சபை, பின்நாட்களில் பவுலினால் குறிப்பிடப்படுகின்றது. இதைப் பற்றி பவுல் எப்படிக் குறிப்பிட்டார்? [1 கொரி. 12:27ஐ வாசிக்கவும்.] யாருடைய சரீரமென்று பவுல் அழைத்தார்? [கோடிட்ட இடத்தில் ''கிறிஸ்துவின்'' என்று எழுதி நிரப்பும்.]

இதே விஷயத்தை அர்த்தப்படுத்தி, சரீரத்தைப் பற்றிப் பவுல் இன்னும் என்ன கூறுகின்றார்? அந்த சரீரம் யாருடைய சரீரம் என்று அவர் கூறுகின்றார்? [எபே. 1:22, 23; 5:30; கொலோ. 1:24 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.] யாருடைய சரீரத்தைப் பவுல் ஒரே சரீரம் என்று அழைக்கின்றார்? [கோடிட்ட இடங்களில் "அவருடைய" என்றும் அதைத் தொடர்ந்து அடைப்புக் குறிகளுக்குள் ''கிறிஸ்துவினுடைய'' என்றும் எழுதவும். பாடத் தாளின் பின்புறத்தில் ''சபை'' என்பதற்குப் பிறகு "கிறிஸ்துவின் சரீரம்" என்று எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? இயேசு ஒரே ஒரு சரீரத்தை, ஒரே ஒரு சபையைக் கொண்டுள்ளார் என்று நாம் கற்றுள்ளோம். இந்த சரீரத்தில் எல்லாக் கிறிஸ்தவர்களும் உள்ளனர்.

[இவ்வேளையில் ஆசிரியர் பாடத் தாளைத் திருப்பி ஒருவர் இந்த ஒரே சரீரமான ஒரே சபையில் எவ்விதம் பிரவேசிக்கின்றார் என்று கேட்க விரும்பலாம். பாடத் தாளின் பின்புறத்தில் "உலகம்" என்ற இடத்திலிருந்து "சபை" என்ற இடத்தினுள் வருவதைக் குறிக்கும் வகையில் வெற்றிட அம்புக்குறி ஒன்றை வரையவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)] ஒருவர் சபையினுள் எவ்விதம் பிரவேசிக்கின்றார்? "இரட்சிப்பு" பாடத் தாளிலிருந்து கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்க ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்று கற்றுக் கொண்டோம். நாம் வசனத்தைக் கேட்க வேண்டும், கற்றறிய வேண்டும், அவரில் விசுவாசிக்க வேண்டும், நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும், அவரிலுள்ள நம்முடைய விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும் என்று இயேசு கற்பித்தார். இவற்றை நாம் செய்து, பின்பு வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டால், நாம் இயேசுவுக்குள் பிரவேசிக்கிறோம் (கலா. 3:27). இயேசுவில் ஒரே ஒரு சரீரம் மாத்திரமே இருக்கிறது. ஆகவே, நாம் இயேசுவுக்குள் ஞானஸ்நானப்படுத்தப்படும் போது, இயேசுவில் இருக்கிற அந்த ஒரே சரீரத்திற்குள் பிரவேசிக்கிறோம் என்பது தெளிவாகிறது. இருந்தாலும், நாம் எப்படி ஒரே சரீரத்திற்குள் பிரவேசிக்கிறோம் என்று தர்க்கித்து முடிவு செய்ய அவசியமில்லை. நாம் எப்பொழுது ஒரே சரீரத்திற்குள் பிரவேசிக்கிறோம் என்று வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. [1 கொரி. 12:13ஐ வாசிக்கவும்.] ஒரே சரீரத்திற்குள் நாம் எப்போது பிரவேசிக்கின்றோம்? [பாடத் தாளின் பின்புறம் நம்மை அந்த ஒரே சரீரத்திற்குள் வைப்பதை அம்புக் குறியில் எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

நாம் ஒரே சரீரமாக இருந்தால், நாம் என்னவென்று அழைக்கப் படுகின்றோம்? ஒரு குழு என்ற வகையில் நாம் *சரீரம்* என்று அதாவது கிறிஸ்துவின் *சபை* என்று அழைக்கப்படுகின்றோம். தனிநபர்கள் என்ற வகையில் நாம் *சீஷர்கள்* அதாவது *கிறிஸ்தவர்கள்* என்று அழைக்கப் படுகின்றோம்.

## IV. **கிறிஸ்துவும் சபையும்**

இயேசு சபையுடன் கொண்டுள்ள உறவானது தனிச் சிறந்ததாக உள்ளது. இப்படிப்பட்ட ஒரு உறவை வேறு ஒருவரும் நிலை நிறுத்துவதில்லை.

சபையானது (இதற்கு முன்) எப்பொழுதும் இந்தப் பூமியில் இருந்ததில்லை, எனவே அது ஒரு தொடக்கத்தையும், அதைத் தொடங்கிய ஒருவரையும் கொண்டிருக்க வேண்டும். இயேசு தாம் என்ன செய்வதாகக் கூறியிருந்தார்? [மத். 16:18ஐ வாசிக்கவும்.] ஒரு நபர் கட்டி எழுப்பினால், அவர் என்னவாக இருக்கின்றார்? அவர் கட்டுபவராய் இருப்பதில்லையா? இயேசு சபைக்கு யாராயிருக்கின்றார்? [கோடிட்ட இடத்தில் "கட்டுபவர்" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் சதுரக் கட்டத்தில் இடது புறத்தில் "கட்டுபவர்" என்றும் அதற்குக் கீழே "இயேசு" என்றும் எழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

*இயேசு கட்டுபவராக மட்டுமின்றி, சபைக்கு இன்னொரு செயலைப் புரிபவராகவும் இருக்கின்றார். சபை யார் மீது கட்டப்பட்டுள்ளது?* [*1 கொரி. 3:11*ஐ வாசிக்கவும்.] சபைக்கு இயேசு இன்னும் *என்னவாக இருக்கின்றார்?* [கோடிட்ட இடத்தில் "அஸ்திபாரம்" என்று எழுதவும்.] இயேசு தம் மீதே சபையைக் கட்டி எழுப்பினார் என்றால், நாம் இயேசுவைத் தவிர இன்னொருவர் மீது கட்டி எழுப்புவது *சரியானதாயுள்ளதா?* [*பாடத் தாளின் பின்புறத்தில் சதுரக் கட்டத்தின் கீழ்* "அஸ்திபாரம்" என்றெழுதி அதன் கீழ் "இயேசு" என்று எழுதவும். *(பக்கம் 198ஐப் பார்க்கவும்)*]

*இயேசு சபைக்கு இன்னும் சிலவாக உள்ளார். அவர் சபைக்கு வேறு என்னவாக உள்ளார்?* [எபே. *1:22*ஐ வாசிக்கவும்.] இயேசு சபைக்கு *என்னவாக உள்ளார்?* [கோடிட்ட இடத்தில் "தலை" என்று எழுதி நிரப்பவும்.] எந்த ஒரு நிறுவனத்தின் உடலுக்கும் (அமைப்புக்கும்) தலையின் *பணி என்னவாக உள்ளது?* தலை என்பது நிறுவனத்தை வழி நடத்தி இயக்குவதாயிருப்பதில்லையா? எந்த ஒரு மனிதருமோ அல்லது மனிதர் குழுவோ சபைக்குத் தலையாக இருப்பதில்லை. இயேசு ஒருவரே சபையின் ஒரே ஒரு தலைவர் என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார். [*பாடத் தாளின் பின்புறத்தில் சதுரக் கட்டத்திற்கு* மேல் "தலை" என்றும் அதற்குக் கீழே "இயேசு" என்றும் எழுதவும். *(பக்கம் 198ஐப் பார்க்கவும்)*]

*இயேசு சபைக்கு இன்னும் ஒன்றாக உள்ளார். அவர் சபைக்கு இன்னும் என்னவாக உள்ளார்?* [எபே. *5:23*ஐ வாசிக்கவும்.] இயேசு சபைக்கு *யாராக உள்ளார்?* [கோடிட்ட இடத்தில் "இரட்சகர்" என்று எழுதி நிரப்பவும்.] இயேசு தம் மீது கட்டியெழுப்பிய, தாமே தலைவராக உள்ள சபையில் இருக்கின்றவர்களுக்கு அவரே இரட்சகராக உள்ளார். [*பாடத் தாளின் பின்புறத்தில் சதுரக் கட்டத்தின் வலது மேல் மூலையில்* பரலோகம் என்று எழுதி வரைந்து அதை நோக்கி வெற்றிட அம்புக்குறியிட்டு வெற்றிடத்தில் ஒரு சிலுவையை வரைந்து அதன் கீழ் "இரட்சகர்" என்றும் மற்றும் அதன் கீழ் "இயேசு" என்றும் எழுதவும். *(பக்கம் 198ஐப் பார்க்கவும்)*]

*இந்தப் பகுதியில் நாம் எதைக் கற்றுள்ளோம்?* இயேசுவே சபையைக் கட்டியவராக, அதன் அஸ்திபாரமாக, அதன் தலைவராக மற்றும் சபையின் இரட்சகராக உள்ளார் என்று நாம் கற்றுள்ளோம். சபையுடன் இயேசு தம்மை இவ்வளவு அதிகமாய் உறவுபடுத்திக் கொண்டுள்ளார் என்றால், மனிதர்கள் சபையுடன் அவருக்குள்ள உறவை மதித்து, சபையுடன் அவருக்குள்ள உறவை எடுத்துப் போட முயற்சி செய்யாமல் இருப்பது அவசியம். மனிதர்கள் வேறு சபைகளைக் கட்ட முயற்சிக்கக் கூடாது, வேறே அஸ்திபாரத்தைப் போடவும், வேறே தலைவர்களுக்குக் கீழ்ப்படியவும், வேறு இரட்சகர்களை நாடவும் கூடாது. இயேசுவே சபையின் தேவைகள் யாவுமாய் இருக்கின்றார் (கொலோ. *2:10*).

### V. சபைக்காக இயேசுவின் மரணம்

இயேசு சபையைக் கட்டியவராக, அதன் அஸ்திபாரமாக, அதன்

தலையாக மற்றும் சபையின் இரட்சகராக இருக்குமளவுக்கு அவர் சபைக்காக என்ன செய்துள்ளார்? மற்றும் அவர் ஏன் அதைச் செய்துள்ளார்? [எபே. 5:27ஐ வாசிக்கவும்.] இயேசு தமது சபைக்காகக் கொடுத்தது என்ன? ஏன் அதைக் கொடுத்தார்? [கோடிட்ட இடத்தில் "தம்மையே அதற்காகக் கொடுத்தார்" மற்றும் "அன்பினால்" என்று எழுதி நிரப்பவும்.] இது இன்னொரு வகையில் விளக்கப்படுகின்றது. [அப். 20:28ஐ வாசிக்கவும்.] சபையை இயேசு எதைக் கொண்டு விலைக்கு வாங்கினார்? [கோடிட்ட இடத்தில் "தம்முடைய சுய இரத்தத்தைக் கொண்டு" என்று எழுதி நிரப்பவும்.]

[இந்த வேளையில் ஆசிரியர் பாடத் தாளின் பின்புறத்தில் அப். 20:28 என்று எழுதி, பின்வரும் கேள்விகளைக் கேட்க விரும்பலாம்:

1. சபையை விலைக்கு வாங்கியது யார்?
2. சபை யாருக்கு உரியது?
3. சபை ஏன் அவருக்கு உரியதாயிருக்கின்றது?
4. அதற்காக அவர் செலுத்திய விலை என்ன?
5. சபையை நாம் என்னவென்று அழைக்க வேண்டும்?
6. சபையின் மதிக்கப்பட்ட விலை என்ன?
7. சபைக்கு எதனை விலை செலுத்த இயேசு தயாராயிருந்தார்?
8. இயேசுவுக்கு சபை மதிப்புள்ளதாக இருக்கின்றதா?
9. இயேசுவின் இரத்தத்தின் பயனை அடைய ஒருவர் எவ்விடத்தில் இருக்க வேண்டும்?
10. இயேசு தம்முடன் பரலோகத்திற்கு யாரை அழைத்துச் செல்வார்?

இந்தக் கேள்விகளை எழுதிய பிறகு ஆசிரியர், இக்கேள்விகளுக்குக் கற்பவர் அப். 20:28ல் இருந்து பதில் அளிக்க உதவி செய்வார். பதில்கள் பின்வருபவைகளாய் இருக்கும் என்பது உறுதி: 1. இயேசு; 2. இயேசு; 3. அவர் அதை வாங்கினார்; 4. அவருடைய இரத்தம்; 5. அவருடைய (கிறிஸ்துவின்) சபை; 6. இயேசுவின் இரத்தம்; 7. அவருடைய இரத்தம்; 8. ஆம்; 9. அவருடைய சபையில்; 10. அவருடைய சபையை.

10வது கேள்வியை விவரிப்பதற்கு, ஆசிரியர் பின்வரும் உவமையைப் பயன்படுத்தலாம்: ஒரு பை நிறைய மளிகை சாமான்களை வாங்கிய ஒரு நபர் அவற்றை ஒரு வைப்பறையில் வைத்துவிட்டு மற்ற சில பணிகளுக்காக விரைந்து சென்றார். அவர் திரும்பி வரும்பொழுது, அந்த அறையில் தமது பையுடன் அதே போன்ற மற்ற பல பைகள் இருப்பதைக் காண்கின்றார். அவர் தம்முடன் எந்தப் பையை எடுத்துச் செல்வார்? அவர் தாம் வாங்கியிருந்த பையை மட்டுமே எடுத்துச் செல்வார். அவர் வேறு பைகள் எவற்றையாவது எடுத்துச் செல்வாரென்றால், அவர் தமக்குரியதல்லாத பையை எடுத்துச் செல்பவராய் இருப்பாரே. அது போலவே, இயேசு தாம் விலை கொடுத்து வாங்கியவர்களையே பரலோகத்திற்குக் கூட்டிச் செல்வார். அவர் தம் இரத்தத்தை விலையாகக் கொடுத்து வாங்கப்படாத வர்களைப் பரலோகத்திற்குக் கூட்டிச் செல்வாரென்றால், அவர் தாம் சிலுவையில் சிந்திய இரத்தத்தைத் தாமே மதிப்பற்றதாக்குபவராக இருப்பாரல்லவா? ஏனெனில், அவர் தமது இரத்தத்தை விலை கொடுத்து

*வாங்கப்படாதவர்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் சென்றால், பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு அவரது இரத்தம் அவசியமில்லை என்றாகி விடுமல்லவா? சபை என்பது அவரது இரத்தத்தை விலை கொடுத்து வாங்கப்பட்ட மக்களைக் கொண்டதாகும்; ஆகையால், அவர் தம் சபையை மட்டுமே பரலோகத்திற்குக் கூட்டிச் செல்வார். நீங்கள் அவருடைய சபையில் இருக்கின்றீர்களா?*]

*இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? இயேசு தம் அன்பினால் சபைக்காகத் தமது இரத்தத்தைச் சிந்தினார் என்று நாம் கற்றுள்ளோம். இயேசுவின் இரத்தத்தினுடைய பயன்களை நாம் அடைய வேண்டும் என்றால், நாம் அவருடைய சபையில் இருக்க வேண்டும்.*

## VI. *கீழ்ப்படிகின்ற சபை*

*இயேசு கட்டியெழுப்பிய சபை யாருக்குக் கீழ்ப்படிகின்றது? அவரது சபையானது மத கட்டளைகள், ஆச்சாரங்கள் மற்றும் மனிதர்களின் பாரம்பரியங்கள் ஆகியவற்றிற்குக் கீழ்ப்படிகின்றதா?* [எபே. *5:24*ஐ வாசிக்கவும்.] *சபை யாருக்குக் கீழ்ப்படிகின்றது?* [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்துவுக்கு" என்று எழுதி நிரப்பவும்.]

*இயேசு சபைக்குத் தலையாய் இருக்கின்றார், மற்றும் சபை அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கின்றது என்றால், சபைகள் தங்கள் சுய சட்டங்களையும் ஒழுங்கு முறைகளையும் ஏற்படுத்திக் கொள்ளுதல் என்பது சரியானதா யிருக்கின்றதா? கிறிஸ்துவின் சபையில் உள்ளவர்கள் அவருக்கே (கிறிஸ்துவுக்கே) ஒவ்வொன்றிலும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாயிருக்க வேண்டும். அவருடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் (அவரது) மக்களினின்று அறுப்புண்டு போவார்கள் (அப். 3:23).*

*இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? கிறிஸ்துவின் சரீரமான சபையானது கிறிஸ்துவின் சித்தத்தைச் செய்கின்றது என்று நாம் கற்றுள்ளோம்.*

## VII. **இசைவு**

*1. இயேசு (தம்) மக்கள் என்ற ஒரே சரீரமான சபையைக் கொண்டுள்ளார் என்று நாம் ஏற்கனவே கற்றுள்ளோம். இந்த ஒரே சரீரத்தின் உறுப்பினர்கள் தங்களுக்குள் எவ்வகையான உறவுமுறை கொண்டிருக்கும் படி இயேசு விரும்புகின்றார்? அவர்கள் ஒருவருக்கு மற்றவர் அந்நியமா யிருக்கும்படி அவர் விரும்புகின்றாரா அல்லது அவர்கள் ஒருமைப் பாட்டுடன் இருக்கும்படி அவர் விரும்புகின்றாரா?* [யோவா. *17:22*ஐ வாசிக்கவும்.] *இயேசுவும் பிதாவும் ஒருவருக்கொருவர் இசைவுடன் செயல்படுகின்றனர். இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் தங்களை (இயேசு மற்றும் பிதாவை) ஒரு முன்மாதிரியாகப் பின்பற்ற வேண்டும் என்று விரும்புகின்றாரா?* [கோடிட்ட இடங்களில் "ஒன்றாயிருக்கிறது போல," "ஒன்றாயிருக்கவும்" என்று எழுதி நிரப்பவும்.] *இயேசுவும் பிதாவும் ஒன்றாயிருக்கிறதுபோல இயேசுவைப் பின்பற்றுகின்றவர்களும் ஒன்றாயிருக்கும்படி இயேசு விரும்புகிறார்.*

2. கொரிந்துவில் இருந்த சபையார் இயேசு விரும்பிய வகையில் வாழும்படி அவர்களை உற்சாகப் படுத்துவதற்காகப் பவுல் அவர்களுக்கு (நிருபம்) எழுதினார். அவர்களுக்குள் உட்பூசல் இருந்தது. அவர்கள் என்ன செய்யும்படிக்குப் பவுல் கேட்டுக் கொண்டார்? [1 கொரி. 1:10ஐ வாசிக்கவும்.] அவர்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது? [கோடிட்ட இடங்களில் "ஒரே" மற்றும் "பிரிவினைகள்" என்று எழுதி நிரப்பவும். வேதாகமத்தின் சில பதிப்புகளில் உள்ள வார்த்தை மாறுபாடுகளின் காரணமாக பாடத் தாளில் இவ்விடத்தில் ஆசிரியர் சிறு மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கலாம்.] அவர்களிடையில் பிரிவினை என்பது ஏற்றுக் கொள்ள முடியாததாகவும் திருத்தப்பட வேண்டியதாகவும் இருந்தது.

3. பிலிப்பியில் இருந்த சகோதர சகோதரிகளுக்குப் பவுல் கொடுத்த அறிவுறுத்தல் என்ன? [பிலி. 1:27ஐ வாசிக்கவும்.] அவர்கள் விசுவாசத்திற்காகப் பிரயாசப்பட்டதில் என்னவிதமான எண்ணப்போக்கு இருக்க வேண்டுமென்று பவுல் விரும்பினார்? [கோடிட்ட இடங்களில் "ஒரே" மற்றும் "கூட" என்று எழுதி நிரப்பவும்.] எத்தனை விசுவாசங்கள் உள்ளன? ஒரே விசுவாசம்தான் உள்ளது (எபே. 4:5).

இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? இயேசுவின் பின்பற்றாளர்களான அவருடைய சபையார் ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். அவர்கள் இசைவுடன், ஒரே சிந்தையுடன், பிரிவினையின்றி, ஒருவருக்கொருவர் கெடுமதியின்றி ஒன்றாக ஊழியம் செய்ய வேண்டும்.

இயேசு ஒரே சபையைக் கட்டியெழுப்பி மற்றும் சபைக்குத் தலைவர் என்ற வகையில் விசுவாசிகள் என்ற தமது சரீரத்தில் ஒருமைப்பாட்டை விரும்புகின்றார் என்றால், பிறகு ஏன் இத்தனை சபைப் பிரிவுகள் இருக்கின்றன? இது பலர் கேட்கின்ற கேள்வியாக உள்ளது. இதற்கான பதில் எளியதாக இருப்பதில்லை, ஆனால் இவ்வாறு நடக்கும் என்று வேதாகமம் சுட்டிக் காண்பிக்கின்றது.

எபேசு சபையின் மூப்பர்களுக்குப் பவுல் அப்போஸ்தலர் என்ன கூறினார் என்பதைக் கவனியுங்கள். (அப். 20:17, 28-31ஐ வாசிக்கவும்.) சபைக்கு என்ன நடைபெறப் போவதாயிருந்தது? மனிதர்கள் மாறுபாடான வற்றைப் போதித்து அவ்வாறு செய்வதினால் தங்களுக்குச் சொந்த பின்பற்றாளர்களை ஏற்படுத்திக் கொள்வார்கள் என்று கூறப்படவில்லையா? [பாடத் தாளின் பின்புறத்தில் சபையைக் குறிக்கும் சதுரக் கட்டத்திலிருந்து வெற்றிட அம்புக் குறியொன்றை வரைந்து அதன் கீழ் உலகின் உள் மீண்டும் விழும் ஒரு சதுரக் கட்டத்தை வரையவும். அம்புக் குறிக்குள் "சீஷர்கள்" என்றெழுதி, புதிய சதுரத்திற்கு மேலும், கீழும் அதன் அருகிலும் "மனிதர்கள்" என்றெழுதவும். (பக்கம் 198ஐப் பார்க்கவும்)]

மனிதர்கள் தொடங்கியுள்ள சபைகள் என்பவை தங்களுக்கு மனிதர்களைத் தலைவர்களாகக் கொண்டுள்ளதையும் மனிதர்களின் போதனைகளாகிய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டுள்ளதையும் கவனியுங்கள். இவைகள், இயேசு கட்டியெழுப்பிய, இயேசுவே தலைவராகவும், அஸ்திபாரமாவும், இரட்சகராகவும் இருக்கின்ற சபைக்குப் போட்டியாக

எழும்பியுள்ளன.

இயேசு தம்முடைய சபைக்காக மரித்தார் மற்றும் அவரே தம் சபைக்கு இரட்சகராக இருக்கின்றார். மனிதர்கள் தொடங்கியுள்ள சபைகளுக்காக இறந்தது யார்? மற்றும் இந்த சபைகளுக்கு இரட்சகராக இருப்பது யார்? மனிதர்களின் சபைகள் தவறான கட்டியெழுப்புவரையும், அஸ்திபாரத்தையும் மற்றும் தவறான தலைவரையும் கொண்டுள்ளன. இதில் இவை இயேசு கட்டியெழுப்பிய சபையிலிருந்து மாறுபடுகின்றன, இவைகள் கிறிஸ்துவின் சபையின் இரட்சகரைப் போல ஒரு இரட்சகரைக் கொண்டிருத்தல் என்பது சாத்தியமாகுமா?

எல்லா மக்களும் இந்த உலகிலிருந்து, மனிதர்களால் தொடங்கப்பட்ட சபைகளில் இருந்தும் வெளியே வந்து, கிறிஸ்துவுக்குள், இயேசு கட்டியெழுப்பியுள்ள சபைக்குள் ஒன்றாயிருக்க வேண்டும். இது ஒன்று மட்டுமே பாதுகாப்பான மார்க்கமாக உள்ளது. மனிதர்கள் தங்கள் சபைகளை மீட்க முடியாது, ஆனால் இயேசு தமது சபையை மீட்க முடியும். நீங்கள் கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராய் இருக்கிறீர்களா? நீங்கள் அதில் உறுப்பினராய் இல்லையென்றால், ஏன் இப்பொழுதே அதில் உறுப்பினராகி, அவரை உங்கள் இரட்சகராகக் கொண்டிருக்கக் கூடாது?

## VIII. *சபையின் அடைவிடம்*

இயேசுவின் அன்பு அவரைத் தமது சபைக்காக மரிக்கும்படி அவரைத் தூண்டிற்று (எபே. 5:25). ஆனால் இயேசு தம்மையே இவ்வாறு கையளிக்க வேண்டியது ஏன்? இதற்கு அப்போஸ்தலரான பவுலினால் இரண்டு காரணங்கள் தரப்படுகின்றன. [எபே. 5:26, 27ஐ வாசிக்கவும்.] இவற்றில் முதலாவது காரணம் எபே. 5:26ல் தரப்படுகின்றது. இயேசு சபைக்கு என்ன செய்யும்படி தம்மையே ஒப்புக் கொடுத்தார்? [கோடிட்ட இடங்களில் ‘‘சுத்திகரித்து,’’ ‘‘பரிசுத்தமாக்குகிறதற்கும்’’ மற்றும் ‘‘நிறுத்திக் கொள்வதற்கும்’’ என்று எழுதி நிரப்பவும்.]

“பரிசுத்தமாக்குதல்” என்ற வார்த்தை இன்றைய நாட்களில் அடிக்கடி பயன்படுத்தப்படுவதில்லை. இது எதனை அர்த்தப்படுத்துகின்றது? இது ஒரு தனிப்பட்ட/சிறந்த நோக்கத்திற்காகப் பிரித்து வைக்கப்படுதல் என்பதை அர்த்தப்படுத்துகின்றது. ஒரு துண்டுத் துணியானது பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட முடியும். அதைக் கொண்டு ஒருவர் தரையைத் துடைக்க முடியும், அதில் தமது மூக்கைச் சீந்த முடியும், அதைக் கொண்டு பாத்திரங்களைத் துடைக்க முடியும், இன்னும் பல வேலைகளைச் செய்ய முடியும். ஒரு துண்டுத் துணியின் மீது நாட்டுக் கொடியின் படம் அச்சிடப்பட்டிருந்தால், அத்துணியானது சாதாரண நோக்கங்களிலிருந்து பிரித்து வைக்கப்பட்டு, அது ஒரு கொடியாக மட்டுமே பயன்படுத்தப்படும். இயேசு தம் சபையைப் “பரிசுத்தமாக்குவதற்காக” இறந்தார், அதாவது தமது மக்கள் தமது பரலோக நோக்கங்களுக்குப் பணிபுரியக்கூடும் வகையில் அவர்களைத் தீமையான இவ்வுலகினின்று பிரித்து வைப்பதற்காக அவர் மரித்தார்.

மேலும் சபையைச் ‘‘சுத்திகரிப்பதற்காகவும்’’ அவர் மரித்தார். தீட்டுள்ளதும், அருவருப்பானதும் மற்றும் அசுத்தமானது எதுவும்

*பரலோகத்தில் உட்புக முடியாது (வெளி. 21:27). சபையைச் சுத்திகரித்து கரைதிரையற்றதாக்கும்படி இயேசு மரித்தார் என்பது அது சுத்தமா யிருக்கும்படி மட்டுமின்றி, அதை அவர் தம்முடன் பரலோகத்திற்கு அழைத்துச் செல்வதற்காகவும் நடைபெற்றது. கிறிஸ்துவுக்குள் உள்ள ஒரே சரீரமானது (சபையானது) சபையைக் கிரயம் கொண்ட (அப். 20:28) இயேசுவின் இரத்தத்தினால் (ரோமர் 12:5; எபே. 1:7) சுத்திகரிக்கப் படுகின்றது.*

*திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சபையைச் சுத்திகரிப்பதற்காகவும் இயேசு தம்மையே கையளித்தார் என்பதைக் கவனியுங்கள். தண்ணீரோ அல்லது வசனமோ தன்னிலே நமது பாவங்களைச் சுத்திகரிக்க வல்லமை பெற்றிருப்பதில்லை. திருவசனத்தினால் தண்ணீர் முழுக்கைக் கொண்டு (நம்மை) சுத்திகரிப்பதற்காக இயேசு தம்மையே கையளித்தார்.*

*வங்கியில் (ஒருவருடைய கணக்கில்) பணம் இல்லையென்றால், (அவர் தரும்) காசோலைக்கு எந்த மதிப்பும் இருப்பதில்லை. அது போலவே, தண்ணீர் மற்றும் வசனம் ஆகியவற்றினால் சுத்திகரித்தலை இயேசுவின் இரத்தமே சாத்தியமாக்குகின்றது. மக்கள் கேள்விப்பட்டு மற்றும் கற்றுக் கொண்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு (யோவா. 17:20; அப். 17:11, 12), மனந்திரும்பி, இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறுவதற்கு வசனம் அவசியமானதாக உள்ளது. தண்ணீரின்றி வசனம் நம்மைச் சுத்திகரிக்காது, மற்றும் வசனமின்றி தண்ணீரும் நம்மைச் சுத்திகரிக்காது. தண்ணீர் மற்றும் வசனம் ஆகிய இரண்டுமே அவசியமானவைகளாய் உள்ளன. சவுல் எழுந்து ஞானஸ்நானம் பெற்றுத் தம் பாவங்கள் போகக் கழுவப்படும்படி கூறப்பட்டது எவ்விதம் என்று கவனியுங்கள் (அப். 22:16). வசனத்திற்குக் கீழ்ப்படிந்து (அப். 2:41) தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவதினால் பதில்செயல் செய்கின்றவர் களைச் சுத்திகரிக்கும்படியாக இயேசு தம்மையே கையளித்தார்.*

*இயேசு தம்மையே கையளித்ததற்கான இரண்டாவது நோக்கம் எபே. 5:27ல் காணப்படுகின்றது. சபையைக் கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாகத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்காக அவர் தம்மையே ஒப்புக் கொடுத்தார்.*

*பணக்கார மனிதர் ஒருவர் நகரின் சேரிப் பகுதியொன்றின் வழியே காரில் செல்லுகையில் தன்னைக் கவர்ந்த ஒரு பெண்ணை அங்கு காணலாம். அவளைப் பற்றி அவர் அறிந்த பிறகு, அவர் தனது, தாயின் சம்மதத்துடன் அந்தச் சேரிப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்காக, அவள் தன் (அம்மனிதரின்) தாயைச் சந்திக்க வேண்டும் என்று விரும்பலாம். ஆனாலும் அப்பெண், ஆடம்பர வசதியான தனது தாயால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நிலையில் இருப்பதைக் கண்ணுறும் அவர், அவளுக்கு நல்ல, சுத்தமான மற்றும் ஏற்புடைய ஆடையைக் கொடுத்து உடுத்தச் சொல்கின்றார். பிறகு அவளை அவர் தனது தாயிடம் அழைத்துச் செல்லுகின்றார்.*

*இதே வகையில், நமது பாவம் நிறைந்த நிலையில், நாம் பிதாவின் வீட்டிற்குச் சென்றால் நாம் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நிலையில் இருப்போம். இயேசு சபையை (நம்மைச்) சுத்திகரித்து, கற்புள்ள கன்னிகை யாகத் தமக்கு முன் நிறுத்திக் கொள்ள (2 கொரி. 11:2) தம்மையே உடுத்துவித்தார் (கலா. 3:27). நீங்கள் கிறிஸ்துவின் சபையில் இருக்கின்றீர் களா? நீங்கள் ஏன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினனாயிருக்க வேண்டும்? கிறிஸ்துவின் சபையின் அடைவிடம் எது?*

*நீங்கள் கிறிஸ்துவின் சபையில் எவ்வாறு பிரவேசிக்கின்றீர்கள்? நீங்கள் திருவசனத்தைக் கேள்விப்பட்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவில் நீங்கள் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றீர்களா? இயேசுவின் சித்தத்திற்கு உங்கள் பதில்செயலில் உள்ள குறைபாடு என்ன? இப்பொழுதே நீங்கள் ஏன் அவருக்குக் கீழ்ப்படியக் கூடாது?*

*இந்தப் பகுதியில் நாம் கற்றுள்ளது என்ன? சபையை கறைதிரை மற்றும் குற்றம் ஆகியவை எதுவுமின்றித் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்காகத் தமது மரணத்தின் மூலம் அதைச் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குவதற்காகத் தம்மையை ஒப்புக் கொடுக்க இயேசு சபையின் மீது கொண்ட அன்பானது அவரைத் தூண்டியது.*

## தொகுப்புரை

*இந்தப் பாடத்தில் நாம், இயேசுவுக்குரிய மக்களாகிய அவருடைய சபையைப் பற்றிப் படித்தோம்.*

I. *கிறிஸ்துவின் சபையில் இருப்பவர்கள் யார்?* கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவரைப் பின்பற்றுகின்றவர்கள், அவரது சீஷர்கள் அதாவது கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகின்ற ஆண்களும் பெண்களும் இருக்கின்றனர்.

II. *எத்தனை சரீரங்கள்?* ஒரே ஒரு சரீரம் மட்டுமே உள்ளது.

III. *இது யாருடைய சபை (சரீரம்)?* கிறிஸ்துவின் சரீரமானது இயேசுவுக்கு உரியது.

IV. *சபைக்கு கிறிஸ்து என்னவாக உள்ளார்?* கிறிஸ்து சபையைக் கட்டுபவராக, அஸ்திபாரமாக, தலைவராக மற்றும் சபைக்கு இரட்சகராக உள்ளார்.

V. *கிறிஸ்து சபைக்கு என்ன செய்திருக்கின்றார்?* கிறிஸ்து தமது இரத்தத்தைக் கொண்டு சபையை வாங்குவதற்காகத் தம்மையே ஒப்புக் கொடுத்தார்.

VI. *சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்துள்ளது.*

VII. *உறுப்பினர்களுக்கிடையில் எவ்வகையான இசைவைக் கிறிஸ்து விரும்புகின்றார்?* அவர் தம் பிதாவுடன் தாம் கொண்டுள்ள இசைவு உறுப்பினர்களுக்கிடையில் இருக்கும்படி விரும்புகின்றார், ஏனெனில் அவர், "நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கவும்" என்று ஜெபித்தார்.

VIII. *சபையைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால்,*

*சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குகிறதற்கும், தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் இயேசு தம்மையே ஒப்புக் கொடுத்தார்.*

ஒருவர் கிறிஸ்தவராவதில் அவர் இயேசுவின் விசுவாசிகளாலான சரீரத்தில் அதாவது கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராகின்றார் என்று நாம் இப்பாடத்தில் கற்றுள்ளோம். இயேசு இவ்விதமாக ஒரே ஒரு சரீரத்தை மட்டுமே கொண்டுள்ளார், வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ள ஒரே ஞானஸ்நானம் பெறும் பொழுது நாம் இந்த சரீரத்தினுள் பிரவேசிக்கின் றோம். அவருடைய சரீரத்தின் உறுப்பு என்ற வகையில் நாம் அவர் கட்டி எழுப்பிய, அவர் ஒருவரே அஸ்திபாரமாகவும், தலைவராகவும், இரட்சகராகவும் உள்ள சபையின் உறுப்பினராகின்றோம். மனிதர்களின் சபைகளில் உறுப்பினராயிருப்பதற்குப் பதில் நாம் யாவரும் இந்த சபையில் தான் உறுப்பினர்களாய் இருக்க வேண்டும். சபையின் மீது இயேசு கொண்ட அன்பானது, அதைக் கறைதிரை முதலான எதுவுமின்றி குற்றமற்ற சபையாகத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்காக அதைச் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குவதற்கு அவர் பாடுபட்ட மரணத்தில் காணப்படுகின்றது. அவர் தமது பின்பற்றாளர்கள் எல்லாரிடமும் ஒருமைப்பாட்டை விரும்புகின்றார்.

நீங்கள் கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராய் இருக்கின்றீர்களா? அவருடைய சபையில் நீங்கள் ஏன் உறுப்பினராய் இருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா? இயேசு தமக்கு முன் நிறுத்திக் கொள்ளும் விசுவாசிகளின் அமைப்பில் உறுப்பாகும்படி இப்பொழுதே நீங்கள் ஏன் இயேசுவைப் பின்பற்றுபவராக, ஒரு கிறிஸ்தவராக மாறக் கூடாது? இப்பொழுதே நீங்கள் அவருடைய பின்பற்றாளராக ஆக விரும்பு கின்றீர்களா?

[அடுத்த பாடத்திற்கான பாட நேரத்தை ஏற்பாடு செய்யவும்.]